## மாமன்றக் கூட்டம்

**நாள்** - 27.12.2016 செவ்வாய்கிழமை பகல் 1.00 மணி

**வருகை** - டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி

**கோப்பு எண் -ந.க.எண் (11118/2016/ எம்.சி. 8)**

---

## பொருள் எண் 1

பொருள் : பொதுசுகாதாரம்–கோயம்புத்தூர் மாநகராட்சி–பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டம் (Swachh Bharat Mission) மூலம் திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் இல்லாத மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிப்பு வெளியிடுதல் – மாமன்ற ஒப்புதல் வேண்டுதல் –தொடர்பாக.

பார்வை:- மாமன்றத் தீர்மான எண்.219 நாள் 30.11.2016

***********

பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்ட.த்தின் (Swachh Bharat Mission) வழிகாட்டுதல்கள் மற்றும் தூய்மை தமிழகத்தின்படி இந்தியா முழுவதும் திறந்த வெளியில் மலம் ஜலம் கழிப்பதை தவிர்க்கும் பொருட்டு கழிப்பிடங்கள் இல்லாத வீடுகளுக்கு தனிநபர் கழிப்பிடங்கள் (Individual House Hold Latrine (IHHL)), சமுதாய கழிப்பிடங்கள் (Community Toilets (CT)) மற்றும் பொதுக்கழிப்பிடஙகள் (Public Toilets (PT)) கட்டி பயன்படுத்துதல் தொடர்பான உரிய வழிமுறைகள் வழங்கப்பட்டு உத்திரவிடப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் வரும் 02.01.2017 முதல் கோயம்புத்தூர் மாநகராட்சி திறந்தவெளியில் மலம் ஜலம் கழித்தல் இல்லாத சிறந்த மாநகராட்சியாக உருவாக்கப்பட உள்ளது என்பதனை பார்வையில் காணும் தீர்மானத்தின் அடிப்படையில் தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டு பொது மக்களிடம் கருத்துகள் பெறப்பட்டு, கருத்துகள் பரிசீலனை செய்யப்பட்டது. மேலும், திறந்தவெளி கழிப்பிடங்கள் 100 வார்டுகளில் கண்டறியப்பட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பொது கழிப்பிடங்களை/ சமுதாய கழிப்பிடங்களை பயன்படுத்தும்படியும் அறிவுறுத்தப்பட்டு தற்போது நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து சமுதாய கழிப்பிடங்களும், பொதுக்கழிப்பிடங்களும் 100 சதவீதம் தூய்மையாக பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது கோவை மாநகராட்சியில் உள்ள 100 வார்டு பகுதிகளிலும் பொது மக்கள் திறந்தவெளியில் மலம், ஜலம் கழிப்பதில்லை என கண்டறியப்பட்டு வரும் 02.01.2017ம் தேதி முதல் திறந்தவெளியில் மலம், ஜலம் கழித்தல் இல்லாத சிறந்த மாநகராட்சியாக அறிவிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். 7745/2014/எம்.இ3

---

(ஒப்பம்) க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி